இன்னும் ஓரிரு மாதங்களில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கரங்களால் ஒருங்கிணைந்த நீதிமன்றம் திறக்கப்பட இருக்கின்றது. அங்கு கிட்டத்தட்ட 500–க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பணியாற்றி வருகின்றார்கள். அவர்களுக்கு தனியாக ஒரு Law Chamber–ஐச் சேர்த்து ஒதுக்கீடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கென தனியாக அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று அனைத்து மாவட்டங்களிலிருந்தும் கோரிக்கை வந்து கொண்டிருக்கின்றது. தற்போது உயர் நீதிமன்றம் மற்றும் சேலம் உள்ளிட்ட ஒரு சில மாவட்டங்களில் மட்டும் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரை பெறப்பட்டால், எதிர்காலத்திலே நிதிநிலைமையைப் பொறுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

கலைக் கல்லூரி

***13552—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி, கம்பம் அல்லது சின்னமனூரில் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கக்கூடிய தருமபுரி மாவட்டத்தில், பாப்பிரெட்டிப்பட்டி,

2019 ஜூலை 1]

அரூர் ஆகிய இரண்டு தொகுதிகளுக்கான சட்டமன்ற இடைத் தேர்தலையும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலோடு சந்திக்கின்ற சூழ்நிலையில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அருளாசியோடு, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும் இணைந்து சட்டமன்ற இடைத் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் நான் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் வந்து தேர்தல் பிரச்சாரம் செய்ததன் காரணமாகவும், அதேநேரத்தில், அம்மா அவர்களுடைய திட்டங்கள் தருமபுரி மாவட்ட மக்களுக்கு சரியான முறையில் சென்று கொண்டிருந்த காரணத்தினாலும், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளின் இடைத் தேர்தல்களிலும் வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், மேலும், அந்த வெற்றிக்காக அரும்பாடுபட்ட நான் சார்ந்திருக்கக்கூடிய இயக்கத்தைச் சார்ந்த கழகத்தினுடைய முன்னோடிகளுக்கும், கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்த நண்பர்களுக்கும் இந்த நேரத்திலே நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் தருமபுரி மாவட்டத்தில் 18 இடங்களில் தொடர்ந்து சூறாவளி சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு, இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்ததற்கு மீண்டும் ஒருமுறை அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–45

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், கம்பம் தொகுதி, கம்பம் அல்லது சின்னமனூரில் கலைக் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர்

அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தேனி நாடாளுமன்றத் தொகுதியில் வாக்களித்து, மிகப் பெரிய அளவில் வெற்றியினைத் தேடித் தந்த தேனி நாடாளுமன்ற வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று, இல்லாததையும், பொல்லாததையும் சொல்லி, இந்த ஆட்சி நீடிக்குமா, நிலைக்குமா என்ற கேள்வியையெல்லாம் மக்களிடத்திலே பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில், நம்முடைய தமிழக அரசு இன்றையதினம் பல்வேறு துறைகளிலே பல்வேறு சாதனைகளைப் படைத்து, அகில இந்திய அளவில் முதன்மை இடத்தைப் பெற்றிருக்கின்றது. அந்த வகையிலே, உயர் கல்வித் துறையில், அகில இந்திய அளவில் சேர்க்கை விகிதம் 25.8 சதவிகிதம் என்றிருக்கின்ற நிலையில், நம்முடைய தமிழ்நாடு அகில இந்திய அளவில் 48.6 சதவிகிதத்தைப் பெற்று, முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது அகில இந்திய அளவில் இருப்பதைக் காட்டிலும், இரு மடங்கு அதிகமாக இருக்கிறது. இதுபோன்றுதான் பல்வேறு துறைகளிலே நம்முடைய துறைகள் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில், இன்றையதினம் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பல்வேறு சாதனைகள் படைக்கின்ற அற்புதமான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் உறுதுணையோடு மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, எங்களுடைய தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு என்பது விவசாயப் பெருங்குடி மக்கள், தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக வாழுகின்ற பகுதி. தோட்டத் தொழிலாளர்களுடைய, விவசாயிகளுடைய வீட்டுப் பிள்ளைகள் படிக்க வேண்டுமானால், தொலை தூரத்திற்குச் சென்று உயர் கல்வி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, மீண்டும் இதனைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர்

2019 ஜூலை 1]

மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, என்னுடைய கம்பம் தொகுதிக்கு உட்பட்டிருக்கின்ற கம்பம் நகரத்தில் அல்லது சின்னமனூர் நகரத்தில் ஒரு கலைக் கல்லூரியைத் துவக்க முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய தேனி மாவட்டத்தில் 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 3 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே, 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் பூர்த்தியாகவில்லை. அதேபோல, அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் பூர்த்தியாகவில்லை. மேலும், சுயநிதிக் கல்லூரிகளிலும் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் பூர்த்தியாகவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். இப்போது இருக்கும் சூழ்நிலையில், அங்கே கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேர வேண்டுமென்று எண்ணுகின்ற மாணவர்களுடைய சேர்க்கைக்கு போதுமான இடம் இருக்கிறது. எதிர்வரக்கூடிய காலகட்டங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.*

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும் என்று சொன்ன நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியில் ஒரு கலைக் கல்லூரி வேண்டுமென்று நீண்ட நாட்களாக நாங்கள் கோரி வருகிறோம். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வோர் ஆண்டிலும் 20 சதவிகித மாணவர்களை அதிகமாக சேர்ப்பதாகச் சொல்லி, தொடர்ந்து 3 ஆண்டுகளாகச் சேர்த்து வருகிறார்கள். ஆனால், அது போதிய அளவுக்கு இல்லை. அங்கே மாணவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. எனவே, நீங்கள் உடனடியாக பெண்களுக்கென்று தனியாக அரசு கலைக் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு முன் வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காரைக்குடியிலே பெண்களுக்காக தனியாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும், அம்மா அவர்களுடைய வழியிலே ஆட்சி நடத்தி வரும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலும் சேர்த்து இந்திய வரலாற்றிலே இல்லாத அளவிற்கு 81 புதிய கல்லூரிகளும், 1,555 புதிய பாடப் பிரிவுகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. நம்முடைய கம்பம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இந்திய அளவிலே இன்றைக்கு மாணவர்களுடைய சேர்க்கையில் தமிழகம் முதலிடத்திலே இருக்கின்றது என்ற நிலையை உருவாக்கி, அதன்மூலம் அனைவரும் படிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே, அம்மா அவர்கள் வழியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அந்த வகையிலே, உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டத்திலே, 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 4 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு மாணாக்கர் மற்றும் மாணவிகளுடைய சேர்க்கை

2019 ஜூலை 1]

கூடுதலாக இருக்கின்ற காரணத்தினால், வருங்காலங்களில் அரசுக் கல்லூரிகளிலே 20 சதவிகிதம் மாணாக்கர்களை கூடுதலாகச் சேர்ப்பதற்காகவும், அரசு உதவிபெறும் கல்லூரிகளிலே 15 சதவிகிதம் மாணாக்கர்களை கூடுதலாகச் சேர்ப்பதற்காகவும், அதேபோல, சுயநிதிக் கல்லூரிகளிலே 10 சதவிகிதம் மாணாக்கர்களை கூடுதலாகச் சேர்ப்பதற்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், இன்றைக்கு அனைவரும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே சேர்ந்து படிக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எதிர்வரக்கூடிய காலகட்டங்களில் அங்கே தனியாக ஒரு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க தேவை ஏற்படும்பட்சத்தில் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதியிலே அரசு கலைக் கல்லூரியோ அல்லது அரசு உதவிபெறும் கலைக் கல்லூரியோ இல்லை. ஆகையால், மாணவர்கள் 50, 60 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பழனி அல்லது திண்டுக்கல்லுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு தன்னுடைய பதிலுரையிலே, அரசு கல்லூரியிலே கூடுதலாக 20 விழுக்காடும், அரசு உதவிபெறுகின்ற கல்லூரிகளிலே கூடுதலாக 15 விழுக்காடும் மாணவர்களைச் சேர்க்கலாம் என்ற உத்தரவு போட்டிருப்பதாகச் சொன்னார்கள். எங்களுடைய மாணவச் செல்வங்கள் எல்லாம் கல்லூரிக்குச் சென்று படிக்க வேண்டுமென்றால், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆண்கள் மற்றும் மகளிர் கல்லூரிக்குத்தான் சென்று படிக்க வேண்டும். கடந்த 2, 3 ஆண்டுகளாக மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு விரும்புவது இல்லை.* Arts & Science *கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்குத்தான் மாணவச் செல்வங்கள் விரும்புகிறார்கள். எனவே, அரசு கல்லூரியில் மாணவர் சேர்க்கையை 20 விழுக்காடு கூடுதலாக உயர்த்தியிருப்பதைப்போன்று, அரசு உதவிபெறுகின்ற கல்லூரிகளிலும் 20 விழுக்காடு கூடுதலாக உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

[2019 ஜூலை 1

அதேபோல, எங்கள் பகுதியிலே கல்லூரியே இல்லாத சூழ்நிலை இருக்கிறது. பழனியிலே போதுமான இடங்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலும் போதுமான இடமிருக்கிறது. வருகின்ற காலங்களிலே மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, இந்து சமய அறநிலையத் துறை மூலமாக, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட எந்த இடத்திலாவது ஒரு கல்லூரியோ அல்லது உறுப்புக் கல்லூரியோ, ஆண்கள் கல்லூரியோ அல்லது பெண்கள் கல்லூரியோ அல்லது இரண்டு பேரும் சேர்ந்து படிப்பதற்குரிய கல்லூரியோ அமைத்து, மாணவர்கள் படிப்பதற்கான வசதியை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு உதவிபெறும் கல்லூரிகளிலே 20 சதவிகிதம் மாணவர் சேர்க்கை வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, இதுதொடர்பாக அரசாணை வெளியிடப்பட்டு, 15 சதவிகித மாணவர்கள் சேர்க்கைக்காக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதன்மூலம் மாணவர்கள் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் மூலமாக கூடுதலாக ஓர் அரசு உதவி பெறும் கல்லூரியைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே பழனியில் அந்தக் கல்லூரிதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மேலும் ஒரு கல்லூரி ஒட்டன்சத்திரத்தில் வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இந்து சமய அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களோடு இதுகுறித்து கலந்தாலோசித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசனை செய்து, மாணவர்களின் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் அந்தப் பகுதியில் அதிகப்படியாக பெறப்பட்டிருந்தால், எதிர்வரக்கூடிய காலங்களில் அதுகுறித்து ஆய்வு செய்து, அந்தப் பகுதியில்*

2019 ஜூலை 1]

மாணாக்கர்களின் சேர்க்கைக்குண்டான வழிவகைகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

கால்நடைத் தீவனம் வழங்குதல்

***24187—திரு. எஸ். ரகுபதி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளின்மூலம் கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் மற்றும் உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகிற தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் முதலில் காணிக்கையாக்குகின்றேன். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) பொதுமக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் தேவையினை நிறைவு செய்வதே பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருப்பதனால், கால்நடைகளுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இயங்கும் கடைகளிலிருந்து தீவனங்களை வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.